# வெளிநாட்டவர்கள் நடத்திய 3 ஹோட்டல்கள் மூடப்பட்டன

கோலாலம்பூர், மார்ச் 25- வெளிநாட்டவர்களால் சட்டவிரோதமாக நடத்தப்பட்டு வந்த மூன்று ஹோட்டல்கள் இழுத்து மூடப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக 6 வெளிநாட்டவர்களும் ஹோட்டல்களை வாடகைக்கு விட்ட மூன்று உள்நாட்டு பிரஜைகளும் கைது செய்யப்பட்டனர்.

கூட்டரசுப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக பல ஹோட்டல்களை வெளிநாட்டவர்கள் நடத்தி கொண்டிருப்பதாக புகார்கள் கிடைத்திருக்கின்றன என்று கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் தெரிவித்தது.

இதனை அடுத்து கடந்த ஒரு வார காலமாக மாநகராட்சி மன்றத்தின் அமலாக்க பிரிவு,




குடிநுழைவு இலாகா மற்றும் காவல்துறையினர் அந்த ஹோட்டல்களை அணுக்கமாக கண்காணிக்க தொடங்கினர்.

நேற்று முன்தினம் புக்கிட் பிந்தாங் வட்டாரத்தில் சோதனைகள் நடத்தப்பட்டன. அப்போது அனுமதியின்றி மூன்று ஹோட்டல்களை வெளிநாட்டினர் நடத்தி வந்தது தெரிய வந்தது.

அந்த வெளிநாட்டவரிடம் முறையான ஆவணங்கள் எதுவும் இல்லை. அவர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும் 2003ஆம்ஆண்டு கூட்டரசுப் பிரதேச ஹோட்டல்கள் சட்டத்தின் கீழே அந்த மூன்று ஹோட்டல்களும் இழுத்து மூடப்பட்டன.

அதே சமயத்தில் அந்த ஹோட்டல்களை வாடகைக்கு விட்டவர் களிடமும் விசாரணை நடத்தப்படுகிறது.